வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 19.06.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 164 பக்கங்கள் : 08

# சுரேஷ் சாலேயுக்கு எதிரான விசாரணைகள் தடைப்படாது!

## அரசாங்கம் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஜூன். 19

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வரும் விசாரணைகளுக்கு எந்தவித தடைகளும் இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் விசாரணைகள் தடுக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை எனவும் கூறினார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் செயல்பாடுகளுக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை என்றும், அதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், அரசியல் நோக்கங்களுக்காக தவறான தகவல்கள் பரப்பப்படுவதாகவும், விசாரணைகள் முறையான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் அமைச்சர் கூறினார்.

(அ)

# காவலில் சாலேயுக்கு சித்திரவதையா? குற்றச்சாட்டை நிராகரித்த அமைச்சர்



கொழும்பு, ஜூன். 19

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் இருந்தபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார், ஆடைகள் களையப்பட்டு அவமதிக்கப்பட்டார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

மேற்படி விசாரணைகள் அரசியல் தலையீடுகளின்றி, முற்றிலும் சட்டத்திற்கு உட்பட்டே நடத்தப்படுவதாகவும் அமைச்சர் நேற்று சுட்டிக்காட்டியுள்ளார்.

விசாரணையின்போது சுரேஷ் சாலே, கடுமையான முறையில் நடத்தப்பட்டார் மற்றும் அவமதிக்கப்பட்டார் என அவரது மனைவியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே, இந்த குற்றச்சாட்டை அமைச்சர் நிராகரித்தார்.

"தடுப்பு உத்தரவின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குக் கொண்டு வரப்படும் எந்தவொரு நபரும் ஒரு சாதாரண சந்தேக நபரைப் போலவே

07

# மாகாண அதிகாரங்களை மத்திக்கு பறிப்பதில் தீவிரமாக உள்ளது அரசு!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 19

மாகாணத்தில் உள்ள அதிகாரங்களை மத்திக்கு கொண்டு செல்வதில் புதிய அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய தினம் (நேற்று) தெல்லிப்பழை பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில்

07

# செம்மணி புதைகுழியில் நேற்றும் 7 எலும்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 19

செம்மணி மனிதப் புதைகுழியில், இன்று, ஒரு குழந்தையின் எலும்புக்கூடு உட்பட 5 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 7 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வின் 28ஆம் நாள் அகழ்வுப் பணி, நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சான்றுப் பொருள்களாக சிறு பாசிமணி துண்டு, கை வளையல், ஆணிகள், பிளாஸ்ரிக் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

அதவேளை, பாரிய உலோக துண்டு ஒன்று

07

# கோட்டாவின் மேன்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை தொடர்பில் தாம் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்க கோரி, முன்னாள்

07

# வேலை செய்யாமல் இருந்தால் பிரச்னை வராது என்ற மனநிலையில் அதிகாரிகள்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கவலை

யாழ்ப்பாணம், ஜூன். 19

இன்றைய அதிகாரிகளிடத்தில் வேலை செய்யாமல் இருந்தால் பிரச்னையில்லாமல் இருந்துவிட்டுப் போகலாம், அதிக வேலை செய்தால் அதிக பிரச்னைகள் வரும் என்ற எண்ணம் உருவாகி வருகின்றது. இதனால், எமது சமூகத்துக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் உரியவாறு பயன்படுத்திக் கொள்ளும் நிலை அருகி வருகின்றது, என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர்களின்

07

# யாழில் இருந்து தங்கம் கடத்த முற்பட்ட 8 பேரும் சுங்க அதிகாரிகளின் காவலில்!

யாழ்ப்பாணம், ஜூன். 19

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் திங்கள்கிழமை வரை சுங்க திணைக்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்று அனுமதித்துள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டினத்துக்கு நேற்று முன் தினம் புதன்கிழமை பயணிக்க இருந்த பயணிகளில் இந்தியப் பிரஜைகளான இருவரின் உடைமையில் இருந்து தலா 100 கிராம் தங்க கட்டிகள் மீட்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பயணிகளை சோதனைக்கு உட்படுத்தியவேளை சந்தேகத்திற்கு இடமான 26 பயணிகளைச் சுங்க திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 26

07

# தமிழக மீனவர் பிரச்னைக்கு இராஜதந்திர வழியில் தீர்வு!

## இந்தியா செல்கிறார் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜூன். 19

இலங்கை மற்றும் தமிழக கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான எல்லைப் பிரச்னைக்கு இராஜதந்திர முறையில் தீர்வு காண, எதிர்வரும் ஜூலை மாதத்தில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைத் தடுக்க கடற்படை மூலம் தகுந்த

07

# நான் தடுத்துவைக்கப்பட்ட இடம் ஒரு நரகம் போன்றது!

## அங்கு மீண்டும் செல்லமாட்டேன்

## சட்டத்தரணியிடம் சாலே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 19

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளர் தன் மீது தனிப்பட்ட பழிவாங்கும் எண்ணம் கொண்டவர் என அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தமது சட்டத்தரணியிடம்

07

# கோட்டாவின் செயலாளர் சுகீஸ்வர விளக்கமறியலில்



கொழும்பு, ஜூன். 19

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளராகப் பணியாற்றிய சுகீஸ்வர பண்டார, மத்திய குற்றவியல் விசாரணைப் பணியகத்தினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை தொடரவேண்டும்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையிடம் வலியுறுத்து

ஜெனீவா, ஜுன். 19

மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும், மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த ஆண்டு இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ஏற்கனவே முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும், மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை இவ்விஜயத்தின்போது நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் பயணம் மேற்கொண்ட ஆணையாளர், சகல சமூகங்களையும் சேர்ந்த பாதிக்கப்பட்ட தரப்பினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மதத்தலைவர்களுடன் சந்திப்புக்களை நடாத்தியதுடன், அண்மைய காலங்களில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழியையும் பார்வையிட்டார்.

அத்தோடு பொருளாதார நெருக்கடி, கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்நெருக்கடியைக் கையாள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றின் விளைவாக மனித உரிமைகள் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்களையும் ஆணையாளர் அடிக்கோடிட்டுக் காண்பித்தார்.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபையின் கிளைக் குழுக்களான சிறுவர் உரிமைகள் தொடர்பான உபகுழு, சித்திரவதைகளைத் தடுப்பதற்கான உபகுழு, விசேட தேவையுடையோர் உரிமைகள் தொடர்பான உபகுழு என்பவற்றுக்கான அறிக்கைகள் தாமதமாகவே சமர்ப்பிக்கப்பட்டன. அதுமாத்திரமன்றி உலகளாவிய காலாந்தர மீளாய்வின்போது நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அரசாங்கம் தாமாகவே ஒரு இடைக்கால அறிக்கையைத் தயாரித்தது.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உபகுழு, வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான குழு ஆகியவற்றின் மீளாய்வுக் கூட்டங்களில் இலங்கையிலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர், சிவில் சமூகப்பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கலந்துகொண்டனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# இந்து ஆலயங்கள் தொடர்பான சட்டம் வவுனியாவில் முக்கிய கலந்துரையாடல்

வவுனியா, ஜுன். 19

ஆலயங்கள் மற்றும் தர்ம நம்பிக்கை பொறுப்பு நிறுவனங்களின் நிர்வாகத்தினருடனான கலந்துரையாடல் ஒன்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் இந்து ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் தொடர்பாக இலங்கையில் காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள், மற்றும் 1917ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தில் அரச அதிகாரிகளுக்கு தரும நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச செயலாளருக்கு காணப்படும் அதிகாரங்கள், ஆலயங்கள் மற்றும் சமயநிறுவனங்கள் தொடர்பாக இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய சட்ட ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வளவாளராக சட்டத்தரணி வி.எஸ்.கணேசராஜன் கலந்துகொண்டதுடன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் ப. சத்தியநாதன், மற்றும் ஆலயங்களின் நிர்வாகிகள் பங்கேற்றனர். (அ)

# காரைநகர் - ஊர்காவற்துறை இடையே மேம்பாலத்தை அமைப்பதற்கு அனுமதி



யாழ்ப்பாணம், ஜுன். 19

காரைநகருக்கும் - ஊர்காவற்துறைக்கும் இடையில் மேம்பாலம் கட்டுவதற்கான அனுமதியை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு வழங்கியுள்ளது.

ஊர்காவற்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் அடிப்படை தேவைகள் தொடர்பாக பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

இதன்போது காரைநகர்-ஊர்காவற்துறை இடையில் மேம்பால கட்டுமானத்துக்கான அனுமதி வழங்கப்பட்டது.

காரைநகர் மற்றும் ஊர்காவற்துறைக்கு இடையில் தற்போது கடல்பாதை சேவையில் ஈடுபட்டு வருகிறது. அது பல தடவைகள் பழுதடைவதனால், இரு தீவுகளுக்கும் இடையில் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக காரைநகர் பகுதிக்கான பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றம் ஆகியவை ஊர்காவற்துறையில் காணப்படுகின்றன.

அத்துடன் காரைநகர் மற்றும் ஊர்காவற்துறை இடையே அரச உத்தியோகத்தர்களும் பயணித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடல் பாதை பழுதடைந்து சேவையில் ஈடுபடாதுவிடின் சுமார் 60 கிலோ மீற்றர் தூரம் சுற்றியே வீதி வழியாக பயணிக்கவேண்டிய நிலைமை காணப்படுகிறது.

இதனால் காரைநகர்-ஊர்காவற்துறை இடையில் மேம்பாலம் கட்டி போக்குவரத்தை இலகுபடுத்துமாறு நீண்ட காலமாக இரு பிரதேச மக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இவ்வாறான நிலையில் இரு தீவுகளுக்கும் இடையில் மேம்பாலம் கட்டுவதற்கான அனுமதியை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு வழங்கியுள்ள நிலையில், அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை துரித கதியில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், எழுவைதீவு இறங்குதுறையை ஆழப்படுத்துவது, கடற்படை வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது, எழுவைதீவு மக்களின் நீண்ட கால குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு காணுதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (அ)

# ஆசனப்பட்டி விதிமுறை மீறுவோருக்கு அபராதம்!

## நாளைக்கு பின்னர் புதிய சட்டம் அமுல்

கொழும்பு, ஜுன். 19

வாகனங்களில் பயணிக்கும் போது ஆசனப்பட்டி அணிவதை கட்டாயமாக்கும் புதிய விதிமுறைகளை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த மூன்று மாத சலுகைக் காலம் நாளையுடன் நிறைவடையவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாளைக்கு பின்னர் இந்த விதிமுறைகளை மீறும் வாகன சாரதிகள் மற்றும் பயணிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சு எச்சரித்துள்ளது.

இதன்படி, சாதாரண வீதிகளில் பயணிக்கும்போது வாகனத்தின் சாரதிகள் மற்றும் முன் இருக்கையில் பயணிக்கும் நபர் மாத்திரம் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாகும்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது, வாகனத்தின் சாரதி மற்றும் பின் இருக்கைகளில் பயணிப்பவர்கள் உட்பட அனைத்து பயணிகளும் கட்டாயமாக ஆசனப்பட்டி அணிந்திருக்க வேண்டும்.

இந்த சட்டத்தை மீறுபவர்களுக்கு 1,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை அபாய கட்டத்தை எட்டும் நிலை!

கொழும்பு, ஜுன். 19

டெங்கு நோய் பரவல் அதிவேகமாக அதிகரித்து வரும் நிலையில், இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அபாய கட்டத்தை எட்டும் நிலை காணப்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் முதல் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிவேக அதிகரிப்பு பதிவாகி வருகிறது. இதற்கமைய, ஏப்ரல் மாதத்தில் 5,600 டெங்கு நோயாளர்களும், மே மாதத்தில் 8,500 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

பொதுவாக டெங்கு நோய் சில வருடங்களுக்கு ஒருமுறை அதி-தொற்று நிலையை அடையும் ஒரு தன்மையே வரலாற்றில் காணப்படுகிறது.

இதில் ஆகக்கூடிய சிவப்புப் புள்ளி 2017 இல் பதிவாகியுள்ளது. இவ்வருட வரைபடத்தில் நீல நிறப் புள்ளி மேல்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இதனை நாம் குறைக்க வேண்டியுள்ளது. எனவே, இந்த நேரத்தில் நாம் விழிப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமானது.

வருடம் முழுவதும் இவ்வாறான செயல்பாடுகள் முக்கியமாகும். காலநிலை மற்றும் வானிலை நிலைமைகளுக்கு ஏற்ப இது மாறுபடலாம் -என்றார். (அ)

# அஸ்வெசும கொடுப்பனவு நேற்று முதல் வங்கிகளுக்கு

## ரூ.10 பில்லியனுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜுன். 1

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் தகுதி பெற்றுள்ள பயனாளிகளுக்கான ஜுன் மாதக் கொடுப்பனவுகள் நேற்று முதல் அவர்களது வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நலன்புரி நன்மைகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் [illegible] தகுதி பெற்றுள்ள 1,373,248 பயனாளி குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு கிடைக்கவுள்ளது.

இதற்காக அரசாங்கத்தினால் 10,904,801,250.00 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையானது நேற்று பயனாளிகளின் அஸ்வெசும வங்கி கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள பொது மக்கள் நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
19.06.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழி

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் கடந்த் புதன்கிழமை மீட்கப்பட்ட 14 எலும்புக் கூட்டுத் தொகுதிகளுடன் சேர்த்து இதுவரையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகளின் எண்ணிக்கை 380 ஆக அதிகரித்திருக்கிறது.

இலங்கையில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் அதிக எண்ணிக்கையிலான எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியிருக்கிறது. இதற்கு முன்னர் அதிகூடிய எண்ணிக்கையிலான எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டதாக மன்னார் புதைகுழியே அடையாளம் காணப்பட்டிருந்தது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 18 வயதான மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படையினரால் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது (பிறகு அவளது தாயார், சகோதரன் மற்றும் அயலவர்கள் சிலரும் படையினரால் கொல்லப்பட்டனர்) தொடர்பான வழக்கில் சோமரத்ன ராஜபக்ச என்ற படைவீரர் தனது சாட்சியத்தில் செம்மணியில் 300 - 400 தமிழ் குடிமக்களின் சடலங்கள் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டதாக வெளியிட்ட தகவலையடுத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பிறகு 1999 ஆம் ஆண்டில் இருந்து புதைகுழி தோண்டப்படத் தொடங்கியதிலிருந்து செம்மணி இலங்கையில் தமிழர்கள் படுகொலையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக உலகில் அறியப்படுகிறது.

1995 - 1996 காலப்பகுதியில் யாழ்ப்பாணக்குடா நாட்டை இராணுவம் மீண்டும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தபின்னர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட மற்றும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட தமிழர்களின் உடல்களே செம்மணியில் புதைக்கப்பட்டதாகவும் தற்போது சிறையில் இருக்கும் ராஜபக்ச தனது சாட்சியத்தில் கூறியிருந்தார்.

முதலில் 15 உடல்களே செம்மணி புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டன. அவற்றில் இரு உடல்கள் 1996 ஆம் ஆண்டில் காணமலாக்கப்பட நபர்களுடையவை என்று அடையாளம் காணப்பட்ட பிறகு அரச தரப்பு விசாரணைகள் முடக்கப்பட்டன. செம்மணியில் வேறு மனிதப் புதைகுழிகள் இல்லை என்று அதிகாரிகள் அறிவித்ததை திட்டமிட்ட மூடிமறைப்பு நடவடிக்கை என்று மனித உரிமை அமைப்புக்கள் கடுமையாக கண்டனம் செய்தன. நூற்றுக்ணக்கான உடல்கள் புகைப்பட்டிருக்கின்றன என்ற ராறபக்சவின் வாக்குமூலம் தொடர்பில் 27 வருடங்களாக விசாரணை எதுவும் நடத்தப்படாமல் இருந்த நிலையில், தகனமேடை அமைக்க நிலத்தைத் தோண்டிய கட்டுமாணத் தொழிலாளர்கள் தற்செலலாகக் கண்டெடுத்த மனித எலும்புகளே 2025 பெப்ரவரியில் இருந்து மீண்டும் புதைகுழியை அகழவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்பட்த்தின.

இதுவரையில் கண்டெடுக்கப்பட்ட 380 எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் கைக்குழந்தைகளின் (பத்து மாதங்களுக்கும் குறைவான குழந்தைகளினதும் கூட) எலும்புக்கூடுகள் பலவும் அடங்கும். பாடசாலைப் பைகளும் எலும்புக் கூடுகளுடன் கிடந்தன.

செம்மணியில் அகழப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சர்வதேச மனித உரிமைகள் மற்று சட்ட அவதானிகளும் வெளியிட்ட அறிக்கைகள் திட்டமிட்ட மனிதப் படுகொலைகள் இடம்பெற்றதை உறுதிப்படுத்தும் சான்றுகளை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் போர்க்குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்னிறுத்துவதற்காக போராடும் தமிழச் சமூத்தையும் பொறுத்தவரை, உண்மையைக் கண்டறிவதற்கான உரிமையின் வலிமையான - உலகறிந்த களமாக செம்மணி மேலெழுந்திருக்கிறது.

# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதர்கள்; யார் உண்மையைச் சொல்கிறார்கள்?

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் பேரழிவை ஏற்படுத்திய சோகங்களில் ஒன்றாக 2019 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் விளங்குகின்றன. இத்தாக்குதல்களில் இலங்கையர்கள் மட்டுமன்றி, வெளிநாட்டுப் பிரஜைகளும் உயிரிழந்தனர். எனவே, இதன் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளிகளைத் தீர்மானிக்கும் பொறுப்பு அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் உள்ளது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பணியகம் (FBI) இது குறித்து விசாரணை நடத்தி, சஹ்ரான் ஹாஷிமே இதன் சூத்திரதாரி என்பதை அடையாளம் கண்டுள்ளது.

வெளிநாட்டு முகவர் அமைப்புகளின் தகவல்களுடன் கூடிய அமெரிக்க பலனாய்வு பணியகத்தின் அறிக்கைகள் குண்டு வெடிப்புக்கு பின்னரான விசாரணைகளுக்குப் பங்களிப்பு செய்துள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய உள்நாட்டு தீவிரவாதக் குழுக்களால் நடத்தப்பட்ட இந்த ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்களைத் திட்டமிடுவதிலும் வழிநடத்துவதிலும் சஹ்ரான் முக்கிய பங்கு வகித்தார் என்ற முடிவை இந்த அறிக்கைகள் பலப்படுத்துகின்றன.

இதேபோல், அவுஸ்திரேலிய அதிகாரிகளால் வழங்கப்பட்ட தடயவியல் மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்பு உள்ளிட்ட புலனாய்வு உதவிகள், தாக்குதல்தாரிகளின் வலையமைப்பைக் கண்டறியவும், குற்றவாளிகளின் அடையாளங்களை உறுதிப்படுத்தவும், சர்வதேச தீவிரவாதக் கட்டமைப்புகளுடன் தாக்குதல் தாரிகளுக்கு இருந்த தொடர்பை நிரூபிக்கும் ஆதாரங்களை வலுப்படுத்தவும் உதவியுள்ளன. இந்த வெளிவாரி தகவல்கள் அனைத்தும், இந்தத் தாக்குதல்கள் உள்நாட்டில் திட்டமிட்டு நடத்தப்பட்டவை, ஆனால் சர்வதேச அளவில் தூண்டப்பட்டு, சித்தாந்த ரீதியாக இணைக்கப்பட்டவை என்ற கருத்தை பரந்த அளவில் ஆதரிக்கின்றன.

இருப்பினும், தாக்குதலின் சூத்திரதாரி யார் என்ற கேள்வி குறித்து இலங்கைக்குள் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. தற்போதைய அரசாங்கமும் கத்தோலிக்க திருச்சபையும் இதற்கு மாறுபட்ட ஒரு சித்திரத்தை முன்வைக்கின்றன, மேலும் இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தக் கண்ணோட்டங்கள் பெரும்பாலும் உளவுத்துறை தோல்விகள், தடுப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் உயர் மட்டத்திலான உடந்தை அல்லது அலட்சியப் போக்கு போன்ற கேள்விகளைச் சுட்டிக்காட்டுகின்றன. சுருக்கமாகக் கூறின், இந்தத் தாக்குதலின் மூலம் ஏற்பட்ட தேசிய பாதுகாப்பு உணர்வை மூலதனமாகப் பயன்படுத்தி, கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் இலாபத்தைப் பெறுவதற்காகவே இத்தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்ற தொனியை இந்த விவரிப்பு உணர்த்துகிறது.

இந்தச் சம்பவத்தை விசாரிப்பதில் அமெரிக்காவிற்கு நியாயமான ஆர்வம் உள்ளதைக் கருத்தில் கொள்ளும்போது, அதன் மத்தியாபுலனாய்வுப் பணியக அறிக்கையை நிராகரிப்பது கடினம். ஏனெனில் குண்டு வெடிப்புகளில் பல அமெரிக்கப் பிரஜைகளும் கொல்லப்பட்டனர். இதேபோல், ஐக்கிய இராச்சியம் மற்றும் சீனா போன்ற நாடுகளும் இதில் அக்கறை கொண்டுள்ளன, ஏனெனில் அவர்களின் பிரஜைகளும் இதில் பலியாகியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் எழும் ஒரு முக்கிய கவலை என்னவென்றால், வெளிநாட்டு புலனாய்வுப் பங்களிப்புகள் பொதுவெளியில் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகின்றன என்பதாகும். உதாரணமாக, சஹ்ரான் ஹாஷிமின் முதன்மைப் பாத்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக பொது விவாதங்களில் அமெரிக்க புலனாய்வு பணியகத்தின் கண்டுபிடிப்புகள் மேற்கோள் காட்டப்படுகின்றன. இருப்பினும், இந்த சர்வதேசக் கண்டுபிடிப்புகளையும் உள்நாட்டு விசாரணை முடிவுகளையும் ஒரே ஒருங்கிணைந்த வடிவத்தில் முறையாகப் பொதுமக்களுக்கு முன்வைக்க இலங்கை அரசு போதிய முயற்சிகளை எடுக்கவில்லை. இதன் விளைவாக, பொதுமக்கள் துண்டு துண்டான தகவல்களையே தங்களுக்குள் விளங்கிப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இந்த இடைவெளி பரந்த தாக்கங்களை ஏற்படுத்துகிறது. தேசிய அதிர்ச்சியும் சர்வதேச பயங்கரவாத விசாரணைகளும் ஒன்றோடொன்று இணையும் இத்தகைய தொரு வழக்கில், தெளிவு என்பது வெறும் நடைமுறைத் தேவை மட்டுமல்ல, அது பொது நம்பிக்கையின் ஒரு விடயமாகும். பாதிக்கப்பட்டவர்களில் பல மதங்களைச் சேர்ந்த இலங்கையர்களும் வெளிநாட்டுப் பிரஜைகளும் அடங்குவர், இது இந்த சோகத்தின் உலகளாவிய பொருத்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இத்தகையதொரு பின்னணியில், தவறான புரிதல்களையும் ஊகங்களையும் தவிர்ப்பதற்கு விசாரணை முடிவுகளைத் தொடர்பு கொள்வதில் சீரான தன்மை அவசியமாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை, முழுமையான வெளிப்படைத் தன்மையினதும் பொறுப்புக் கூறலினதும் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்க புலனாய்வு பணியகத்தின் கண்டுபிடிப்புகள் குறித்த தனது நிலைப்பாட்டை அரசாங்கம் மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்தக் கேள்விக்கான பதிலைப் பெற இந்த நாடு தகுதியுடையது.

அமெரிக்கா தனது "பயங்கரவாதம் குறித்த நாடுகள் அறிக்கை 2019 இலங்கை" என்பதிலும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் தூண்டப்பட்ட தாக்குதல்தாரிகளே இந்த குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறன்று இலங்கையிலுள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் தூண்டப்பட்ட பயங்கரவாதிகள் நடத்திய தொடர் தற்கொலைத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். அப்போதைய ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபு பக்கர் அல்-பாக்தாதி இந்த தாக்குதல்களை பகிரங்கமாகப் பாராட்டினார். சிரியா மற்றும் ஈராக்கில் தமக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து, தனது உலகளாவிய பிரச்சாரத்தை கிளை அமைப்புகள் மற்றும் தூண்டப்பட்ட தாக்குதல்கள் மூலம் தொடர ஐ.எஸ்.ஐ.எஸ். உறுதியாக இருந்தது என்பதை இது விளக்குகிறது. இத்தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் வழிவகுத்தன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

தேசிய மக்கள் சக்தி இந்தத் தாக்குதலின் சூத்திரதாரியை (மகா மூளையை) கண்டறிவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்தது. எனவே கேள்வி என்னவென்றால்: யார் கூறுவது சரி அமெரிக்க மத்திய புலனாய்வு பணியகமா? கத்தோலிக்க திருச்சபையா? அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமா?

அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவாகக் கூற வேண்டும். இல்லையெனில், இன்னும் உறுதியாக நிரூபிக்கப்படாத ஒரு விவரிப்புகளினால் மக்களின் கவனம் திசைதிருப்பப்படும். மாற்று வழிமுறையாக, தற்போதைய விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் இந்த விடயம் இறுதித் தீர்மானத்திற்காக நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் என்பது உள்நாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல, சர்வதேசப் பிரச்சினையுமாகும், ஏனெனில் கொல்லப்பட்டவர்களில் ஐந்து அமெரிக்கர்களும், ஆறு சீன கடல்சார் விஞ்ஞானிகளும் உட்பட பல வெளிநாட்டுப் பிரஜைகளும் அடங்குவர். இறுதியில் பகுத்தறிவே வெல்ல வேண்டும்.

(டெய்லி மிரர் ஆசிரிய தலையங்கம், 15 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 19 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 05
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**இடபம்** குடும்பத்தினருடன் கலந்தா லோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**மிதுனம்** கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கடகம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**சிம்மம்** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. லேசாகதலை வலிக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி** உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி. உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**துலாம்** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**விருட்சிகம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு** சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**மீனம்** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

# செம்மணியில் உள்ள சித்துபாத்தி இந்து மயானம் தமிழின அழிப்பின் நினைவகமாக முன்மொழிவு!

யாழ்ப்பாணம், ஜூன். 19

செம்மணி சித்துபாத்தி இந்து மயானம் தமிழின அழிப்பின் நினைவகமாக பேணும் முன்மொழிவு, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனால் நேற்று முன்தினம் சபை அமர்வில் முன்மொழியப்பட்டது.

குறித்த முன்மொழிவினை வைத்து உரையாற்றி தவிசாளர் மயூரன் தனது உரையில், இன அழிப்பு செய்யப்பட்டு புதைக்கப்பட்ட எமது உறவுகள் இன்று செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றனர்.

எம் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பின் சாட்சியமாக இவ் மயானம் காணப்படுகின்றது. இந் நிலையில் இன அழிப்பின் சாட்சியங்களை பாதுகாக்க வேண்டியதும் அதனை இளைய தலைமுறைக்கு கடந்த வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

குறித்த இந்து மயானம் எமது சபை எல்லைக்குள் காணப்படுகின்ற நிலையில் இதனை ஒரு மயானமாக தொடர்ந்து பேணாமல் இது எம் மீதான இனஅழிப்பின் ஒரு சாட்சியமாக நினைவகமாக பேணுவதற்குரிய நடவடிக்கைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்ற முன்மொழிவினை முன்வைப்பதோடு, குறித்த விடயம் தொடர்பில் செம்மணி சித்துபாத்தி இந்து மயான சபையினருடன் கலந்துரையாடி, அது தொடர்பான விவரங்களுடன் குறித்த முன்மொழிவை உங்களின் ஏகமனதான ஆதரவுடன் ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவதற்காக அடுத்த சபை அமர்வில் சமர்ப்பிக்கின்றேன்-என்றார். (அ)

# அதிமானிடக் கோட்பாட்டை நோக்கி மாணவர் அனைவரும் நகரவேண்டும்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன். 19

"மனிதன் என்பது விலங்குக்கும் அதிமானிடனுக்கும் இடையே கட்டப்பட்ட ஒரு கயிறு. அத்தகைய பலவீனங்களாலும் எதிர்மறைச் சிந்தனைகளாலும் கட்டப்பட்ட அந்தக் கயிற்றை அறுத்து, நாம் அதிமானுடர்களாக நிமிர வேண்டும்" என மாணவர் சமுதாயத்தின் முன்னிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

ஜெர்மனியின் புகழ்பெற்ற தத்துவஞானி பிரீட்ரிக் நீட்ஷே அவர்களின் புகழ்பெற்ற 'அப்படியும் பேசினார் ஜரதுஸ்ட்ரா' என்னும் நூலில் "மனிதன் என்பவன் ஒரு நிலையான உயிரினம் அல்ல. மனித நிலை என்பது ஒரு தற்காலிகப் புள்ளி. மனிதன் என்பது விலங்குக்கும் அதிமானிடனுக்கும் இடையே கட்டப்பட்ட ஒரு கயிறு. நாம் அக்கயிற்றின் மீதுதான் நின்று கொண்டிருக்கிறோம். நாம் பின்னோக்கிச் சென்று விலங்குத் தனத்தோடு வாழப் போகிறோமா அல்லது முன்னோக்கி நகர்ந்து 'அதிமானிடன்' ஆகப் போகிறோமா என்பது நம் கைகளில்தான் உள்ளது" என அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் தேசிய மட்ட நாடகச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து, தேசிய மட்ட நாடகப் போட்டியில் தேசிய விருதுகளை வென்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

பாடசாலையின் முதல்வர் சிதம்பரநாதன் சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக சமூக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைராசா ஜீவானந்தம், கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய முதல்வர் சிங்காரவேலு சிவலோகநாதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் சதாசிவம் புண்ணியமூர்த்தி மற்றும் ஓய்வு நிலை அதிபர் சுப்பிரமணியம் நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# பூந்தோட்டம் பிரதான வீதியில் மரம் நடுகை



வவுனியா, ஜூன். 19

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியின் இரு மருங்கிலும் மரம் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பூந்தோட்டம் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர முதல்வர் சு.காண்டீபன் முதன்மை அதிதியாக கலந்துகொண்டு மரங்களை நாட்டும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நிழ்விற்கான அனுசரணையை கனடா நாட்டில் வசிக்கும் கோபி வழங்கியிருந்தார்.

நிகழ்வில் மாநகர சபையின் வட்டார உறுப்பினர் சி.கிருஸ்ணதாஸ், பூந்தோட்டம் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள், இளைஞர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் சர்வதேச யோகா தினம் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு, ஜூன். 19

இந்தியத் துணைத் தூதரகமும் இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச யோகா தின நிகழ்வு நேற்று முன் தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் 1600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு யோகாப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். மாணவர்களுக்கான யோகாப் பயிற்சிகளை யோகா, சிலம்பம், கராத்தே மற்றும் வர்மக்கலை பயிற்றுநர் ஜெயம் ஜெகன் வழங்கினார்.

மேலும், இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற திறந்த யோகாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் சர்வதேச சாதனையாளர் சி.அகிலத்திருநாயகி, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருள்கள் விலை குறைப்பு தற்போதைக்கு சாத்தியமில்லை

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ



கொழும்பு, ஜூன். 19
உலக சந்தையில் எரிபொருள் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், உள்நாட்டில் எரிபொருள் விலைகளைக் குறைக்க தற்போதைக்கு சாத்தியமில்லை என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் கையிருப்பே தற்போதும் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருவதே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து விளக்குவதற்காக நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதி அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது இலங்கையில் நுகரப்படும் எரிபொருளானது சில மாதங்களுக்கு முன்னர் கணிசமான அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

அந்த அதிக விலை எரிபொருள் கையிருப்பு நாட்டில் இருக்கும் வரை, உள்நாட்டில் எரிபொருள் விலையைக் குறைக்க முடியாது.

எவ்வாறாயினும், தற்போதுள்ள எரிபொருள் கையிருப்பு தீர்ந்து, குறைந்த விலையிலான எரிபொருள் இறக்குமதிகள் நாட்டுக்கு வரத் தொடங்கியவுடன், அரசாங்கத்தினால் எரிபொருள் விலைகளை மறுபரிசீலனை செய்ய முடியும்-என்றார்.

அண்மையில் நாட்டுக்கு வந்த எரிபொருள் கப்பல்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டவையா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், உலக சந்தையின் குறைந்த விலை பலனைப் பெறுவதற்கு முன்னர், கடந்த காலங்களில் அதிக விலைக்கு கட்டளை செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளையே நாடு முதலில் நுகர வேண்டியிருக்கும் - என்றார்.

குறைந்த விலையிலான எரிபொருள் நுகர்வோரை சென்றடைவதற்கு இன்னும் சில காலம் எடுக்கும் என சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், விலைகள் குறையும் என எதிர்பார்ப்பதாகவும், அது நடக்கும் போது தற்போதைய நிவாரணத்தைப் பராமரிப்பதா அல்லது எரிபொருள் விலையை மேலும் குறைப்பதா என்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம்-கண்டி வீதி விபத்தில் ஆசிரியை பலி!

கொழும்பு, ஜூன். 19
யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியின் பூனாவ, கும்புகொல்லேவ பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியை பஸ்ஸின் பின் சக்கரத்தில் சிக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூனாவ, கல்கந்தேகம வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றிய 56 வயதுடையரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# களனி பாலம் அருகே சடலம்!

கொழும்பு, ஜூன். 19
கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவின் சேதவத்த பகுதியில் உள்ள களனி பாலம் அருகே அடையாளம் தெரியாத சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக வந்த தகவலை அடுத்து, கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர்.

இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதி செய்யப்படாத நிலையில், அவர் 35 முதல் 40 வயதுடைய ஆண் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் சுமார் 5 அடி 5 அங்குல உயரம் கொண்டவர் என்றும், சுமார் 1 அங்குல நீளத்திற்கு முடியை வளர்த்துள்ளார் என்றும், மேலாடை அணியாமல் நீல நிறக் கால்சட்டை அணிந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சடலம் தற்போது வைக்கப்பட்டுள்ளதுடன், கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சாலே, கோட்டாபய உள்ளிட்ட யாரானாலும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சிறைதான்!

## கூறுகிறார் அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, ஜூன். 19
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட எவராக இருந்தாலும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சிறை செல்ல தயாராக வேண்டும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய ஏற்றுமதி திட்டம் 2026 -2030 உத்தியோகபூர்வமாக அறிமுக நிகழ்வை தொடர்ந்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுரேஷ் சாலே கைது மற்றும் அவரிடம் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் முற்றிலும் சட்டபூர்வமானவையாகும். இந்த நாட்டில் சட்டம் என்பது சுரேஷ் சாலே, முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அல்லது தற்போதைய ஜனாதிபதி என அனைவருக்கும் பொதுவானது ஆகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தன்னை கைது செய்யவேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ள நிலையில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளில் தவறு செய்திருப்பது உறுதி செய்யப்பட்டால் சட்டத்துக்கு முன் எந்த நிபந்தனைகளும் கிடையாது. சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் தங்களின் நிரபராதித் தன்மையை நிரூபிக்க முடியாவிட்டால், அவர்கள் அனைவரும் சிறைக்கு செல்லத் தயாராக இருக்கவேண்டும்.

மேலும் சுரேஷ் சாலேயின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக கூறி அவருக்கு ஆதரவாக பேசுபவர்கள் உண்மையில் சாலே மீதான அக்கறையில் பேசவில்லை. தங்களுக்கு எதிராக வரவிருக்கும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் தங்களை பாதுகாத்துத் கொள்ளவும் சுரேஷ் சாலேயை ஒரு பகடையாக பயன்படுத்தவே முயற்சிக்கின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது வெறும் மதவாதம் அல்லது பயங்கரவாதத்தைக் கடந்து அரசியல் மற்றும் அதிகாரத் தேவைகளுக்காக அரங்கேற்றப்பட்ட ஒன்று என தற்போது சமூகத்திலும் சட்டத் துறையிலும் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இதற்கான அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் தீவிரமான முன்னெடுக்கப்பட்டு வருகிறது-என்றார்.

## டெங்கு பெருகும் சூழல்;

# 2 ஆயிரத்துக்கும் அதிகமான வளாகங்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 19
இலங்கையில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட 2ஆயிரத்திற்கும் அதிகமான வளாகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது

இதுவரை முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்புத் திட்டங்களின்போது, நுளம்புகள் அதிகம் பெருகும் இடங்களாகப் பாடசாலை வளாகங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகச் சமூக மருத்துவ விசேட நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் 42807 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 உயர்வடைந்துள்ளது.

இந்த மரணங்களில் 77.8 வீத மானோர் பெண்கள் எனப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிழக்கு மாகாண சபையின் பலவீனத்தால் உத்தியோகத்தர்களுக்குப் பெரும் பாதிப்பு!

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு

திருமலை, ஜூன். 19

கிழக்கு மாகாண சபையின் மற்றுமொரு பலவீனம் காரணமாக முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் விசேட தரத்துக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் விசேட தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறு சமர்ப்பிக்காததால் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்ட சிலரது முடிவுகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ சேவை ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி வருடத்துக்கு இருமுறை தடைதாண்டல் பரீட்சை நடத்தப்படவேண்டும். எனினும், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு இந்தப் பரீட்சையை உரிய காலங்களில் நடத்தவில்லை. இந்நிலையில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு நடத்திய நேர்முகப் பரீட்சையில் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறு கேட்கப்பட்டமைதான் வேடிக்கையானது.

அவர்கள் நடத்தவேண்டிய பரீட்சையை நடத்தாமல் எப்படி அவர்கள் பெறுபேறு கேட்க முடியும்? இதனால் பாதிக்கப்படுவது கிழக்கு மாகாண அரச உயரதிகாரிகள் இல்லை. கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த அரசாங்க காலத்தில் கிழக்கு மாகாண அரச நிர்வாகம் மிக மோசமாக பலவீனமடைந்துள்ளது. இந்த மாகாணத்தின் பலவீனம் சம்பந்தமாக கடந்த வாரம் ஊடக அறிக்கையொன்றை விடுத்திருந்தேன். அந்த வகையில் இது மற்றொரு பலவீனமாகும்.

இதனால் இந்த மாகாணத்தில் பொதுமக்களும் தமது நிர்வாக விடயங்களை உரிய காலங்களில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது சிரமப்படுகின்றார்கள். இப்போது அந்த அந்த மாகாணத்தில் பணிபுரிவோரும் பாதிக்கப்படுகின்றார்கள்-என்றார். (அ)

# விசேட டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி சாய்ந்தமருதில் நடவடிக்கைகள் தீவிரம்!



அம்பாறை, ஜூன். 19


கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட டெங்கு ஒழிப்பு வாரத்தின் 4ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று சாய்ந்தமருதில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

ஜூன் 15 முதல் 20 ஆம் திகதி வரை மதஸ்தலங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்காகக் கொண்டு டெங்கு கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் சுற்றுச்சூழல் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களில் விரிவான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பரிசோதனைகளின் போது நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய அபாயகரமான இடங்கள் அடையாளம் காணப்பட்டு உடனடியாக சுத்தம் செய்யப்பட்டதுடன், தேங்கியிருந்த நீரும் அகற்றப்பட்டது. சுற்றுப்புற சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. (அ)

# கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு இரு நீர் குளிரூட்டி இயந்திரங்கள்



அம்பாறை, ஜூன். 19

மாணவர்கள் மற்றும் கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு, கட்டார் சரிட்டி நிறுவனத்தின் அனுசரணையில் இரண்டு நீர் குளிரூட்டி இயந்திரங்கள் கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது கட்டார் சரிட்டி நிறுவனத்தின் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.எப்.எம். கப்ளீன் கலந்து கொண்டு, இரண்டு நீர் குளிரூட்டி இயந்திரங்களை கல்லூரி அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (அ)

# கல்முனையில் நாளை இலக்கிய செயலமர்வு!

காரைதீவு, ஜூன். 19

கல்முனை எழுத்தாளர் ஒருங்கிணைப்பு மையம் மற்றும் கல்முனை நெற் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இளம் மற்றும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்கில், கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பு, கட்டார் பீனிக்ஸ் விளையாட்டு கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் கவிதை மற்றும் சிறுகதை எழுத்துப் பயிற்சி பட்டறையும் செயலமர்வும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவிருக்கும் இச்செயலமர்வில், இலக்கியத் துறையில் அனுபவமிக்க வளவாளர்கள் கலந்து கொண்டு, கவிதை மற்றும் சிறுகதை எழுத்தின் நுட்பங்கள், படைப்பாற்றல் வளர்ப்பு மற்றும் எழுத்து நடை தொடர்பான பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (அ)

# திருகோணமலை கடற்கரையோர புத்தர் சிலை வழக்கு ஒத்திவைப்பு!

திருமலை, ஜூன். 19

திருகோணமலை கடற்கரையோர புத்தர் சிலை வைப்பு வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பிரதான டச்பே கடற்கரைப் பகுதியில் கடற்கரையில் இருந்து சுமார் 11 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் கடந்த வருடம் 2025 நவம்பர் மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் சட்ட விரோதமான முறையில் கட்டுமானத்தை மேற்கொண்டார்கள் எனவும் புத்தர் சிலையை நிறுவி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலை துறைமுக பொலிஸாரினால் கடலோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 28 (01) மற்றும் 14 (01) போன்ற சட்ட விதிகளுக்கு அமைவாக திருகோணமலை நீதிவான் நிதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன் தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் ஜூலை 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையை தடையின்றி நடத்த வலியுறுத்தி போராட்டம்!




மட்டக்களப்பு, ஜூன். 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை சுதந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் குற்றவாளிகளுக்கு சட்டத்தினால் சரியான தீர்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தக் கோரியும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை திசை திருப்ப முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை கண்டித்தும் நேற்று மட்டக்களப்பில் அமைதியான முறையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் இணைப்பாளர் புஹாரி தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் மக்கள் தாக்குதலின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள்,சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்,மதத்தலைவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் வகையிலும் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான அரசாங்கத்தின் விசாரணைகள் எந்த வித அரசியல் தலையீடுகளும் இன்றி, சுதந்திரமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைக்கும் சதொச!

கொழும்பு, ஜூன். 19

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், பல அத்தியாவசிய நுகர்பொருள்களின் விலைகளைக் குறைப்பதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, இந்த திருத்தப்பட்ட புதிய விலைகள் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சதொச கிளைகளிலும் அமுலுக்கு வரவுள்ளன.

அதன்படி,

கோதுமை மா-169.00 - 159.00

பொன்னி சம்பா அரிசி - 235.00 - 229.00

உள்நாட்டு வெள்ளை நாடு அரிசி - 209.00-204.00

வெள்ளை பச்சை சம்பா அரிசி - 240.00 -235.00

சிவப்பு நாடு அரிசி - 239.00 - 234.00

சம்பா சிவப்பு பச்சை அரிசி - 229.00 - 224.00

பெரிய கடலை - 344.00 - 339.00

வெள்ளை பச்சை அரிசி - 199.00 - 196.00

வெள்ளை சீனி - 219.00 - 217.00

நேற்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள எந்தவொரு லங்கா சதொச விற்பனை நிலையத்திலும் இந்த திருத்தப்பட்ட விலைகளில் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காவலில் சாலேயுக்கு...

நடத்தப்படுகிறார்.

சுரேஷ் சாலேயுக்கு எதிராக எந்தவொரு தனித்துவமான அல்லது வழக்கத்திற்கு மாறான முறைகளும் கையாளப்படவில்லை.

யாருக்கும் சிறப்புச் சலுகைகளை வழங்குவதோ அல்லது யாரையும் பிரத்தியேகமாக அவமதிப்பதோ எங்களது கொள்கையல்ல. நிலையான வழிகாட்டு நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன" என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

மேலும், சுரேஷ் சாலேயின் குடும்பத்தினருக்கோ அல்லது அவரது சட்டத்தரணிகளுக்கோ இந்தத் தடுத்து வைப்புத் தொடர்பாக ஏதேனும் நியாயமான கவலைகள் இருப்பின் இந்த வழக்கைக் கண்காணிக்கும் நீதிமன்றத்தின் முன்னிலையில் அந்த விடயங்களை சமர்ப்பிக்க உரிமை உண்டு என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

## யாழில் இருந்து...

பேரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த சுங்க திணைக்கள அதிகாரிகள் 26 பேரையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று ஸ்கான் செய்தனர்.

அதன்போது 6 பேரின் உடலினுள் தங்கக் கட்டிகள் காணப்பட்டன.

அதனை அடுத்து 6 பேரையும் தமது காவலில் எடுத்த சுங்க திணைக்கள அதிகாரிகள், ஏனைய 20 பேரையும் விசாரணைகளின் பின்னர் விடுவித்தனர்.

இந்நிலையில் தங்கக் கட்டிகளை உடைமையில் வைத்திருந்த இருவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை முற்படுத்திய சுங்க திணைக்கள அதிகாரிகள் , இருவரையும் எதிர்வரும் திங்கள்கிழமை வரையில் தமது காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றில் அனுமதி கோரிய நிலையில் , நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

அதேவேளை, தங்கக் கட்டிகளை விழுங்கிய நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 6 பேரையும் தமது காவலில் சிகிச்சை பெற மன்றில் அனுமதி கோரிய நிலையில் அதற்கும் மன்று அனுமதித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 8 பேரில், இரு இலங்கைப் பெண்களும் 6 இந்திய ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (அ)

## மாகாண அதிகார...

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மாகாண அரசிடம் இருந்து முழுமையாக மத்திய அரசாங்கம் ஒப்படைக்கவேண்டும் என கூட்டத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்ததை தொடர்ந்து மாகாண அதிகாரம் அனைத்தையும் மத்திக்கு கொண்டு செல்லும் நோக்கில் குறித்த அரசாங்கம் செயற்பட்டு வருவது தெரிகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையினை ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதனை தேசிய வைத்தியசாலையாக உயர்த்த வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார். ஆனால் அந்த வாக்குறுதியை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றவில்லை.

தேவையான வசதிகளை போதனா வைத்தியசாலைக்கு வழங்கவில்லை. போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படும் அபிவிருத்திகள் அனைத்தும் புலம்பெயர் தமிழர்கள் தமது நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட அபிவிருத்திகள்.

எனவே அரசாங்கம் வடக்கில் உள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யாது அநுராதபுரம் வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசாங்கம் மத்திய அரசுக்கு கீழுள்ள அதிகாரங்கள் கூட வழங்காது புறக்கணித்து வருகிறது-என்றார். (அ)

## கோட்டாவின் மேன்முறையீட்டு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான பரிசீலனையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை, மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய,

குற்றப் புலனாய்வு திணைக்களப் பணிப்பாளர் ஷானி அபேசேகர, திணைக்களத்தின் விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன மற்றும் சட்டமாஅதிபர் ஆகியோர், இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

## கோட்டாவின் செயலாளர்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே, நீதவான் இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

ஒரே காலப் பகுதியில் இரண்டு அரச நிறுவனங்களில் இருந்து சட்டவிரோதமாகச் சம்பளம் பெற்றுக்கொண்ட நிதி மோசடிச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைவாகவே அவர் நேற்று காலை கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

2022ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளர்களில் ஒருவராகப் பணியாற்றிய சுகீஸ்வர பண்டார, அதே காலப்பகுதியில் அன்றைய ஜனாதிபதி செயலகத்தின் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி செலவினத் தலைப்பின் கீழ் ஒரே நேரத்தில் இந்த இரண்டு பதவிகளுக்குரிய சம்பளப் பணத்தையும் அவர் முறைகேடாகப் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவின் ஊழல் எதிர்ப்பு குழுவினால், ஜனாதிபதி செலவினத் தலைப்பின் கீழ் இடம்பெற்ற இந்த நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக மத்திய குற்றவியல் விசாரணைப் பணியகத்திற்கு உத்தியோகபூர்வ முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேயே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் குறித்த உயர் பதவிகளை வகித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில், அரசாங்கத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாகனங்களைத் தனது தனிப்பட்ட தேவைகளுக்காகத் துஷ்பிரயோகம் செய்துள்ளார். அத்துடன், அதன் அரச ஊழியர்களைத் தனது அரசியல் நடவடிக்கைகளில் சட்டவிரோதமாக ஈடுபடுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலும் மத்திய குற்றவியல் விசாரணைப் பணியகம் மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## செம்மணி புதைகுழி...

அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அதற்குள் எலும்புக்கூடுகள் காணப்படுவதனால், அதனைச் சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதனடிப்படையில், அகழ்வுப் பணிகளின்போது இதுவரை 387 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 367 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## வேலை செய்யாமல்...

அழகியல் சார் கலைகளை மேம்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட “ஜெயரட்ணம் நுண்கலையகம்” நேற்று வியாழக்கிழமை காலை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் உத்தியோகபூர்வமாகத் திறந்து மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நுண்கலையகமானது மருத்துவக் கலாநிதியும் கொடைவள்ளலுமான விமல் ஜெயரட்ணத்தால் முழுமையான நிதிப் பங்களிப்புடன், ஜெயரட்ணம் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய நான்கு துறைகளுக்கும் தனித்தனியான வகுப்பறைகளை உள்ளடக்கியதாக இரண்டு மாடிகளைக் கொண்டு இந்த நுண்கலையகம் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் த.தர்மராஜா தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் மற்றும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். இத்திட்டத்தின் கொடையாளரான மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, தேசியக் கொடி மற்றும் பாடசாலைக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. புதிய கட்டடத்தின் பெயர்ப்பலகையை ஆளுநர் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தை மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசேட மேடை நிகழ்வில், இப்பாடசாலைக்கு கடந்த காலங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளை அமைத்துக் கொடுத்ததுடன், தற்போது இந்த நுண்கலையகத்தையும் நிர்மாணித்துக் கொடுத்த மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணத்தின் மகத்தான சேவையைப் பாராட்டி, அவருக்கு “வாழும் வள்ளல்“ விருது வடக்கு மாகாண ஆளுநரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர்,

“ஒரு பாடசாலைக்கு அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சமூகம் உதவி செய்வதுதான் வழமை. ஆனால், இந்தப் பாடசாலைக்கு விடுதிக் கட்டடங்கள் மற்றும் நுண்கலையகம் என்பவற்றை அமைத்துக் கொடுத்த விமல் ஜெயரட்ணத்துக்கும், இந்தப் பாடசாலைக்கும், ஏன் இந்த மாவட்டத்துக்கும் கூட எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆனாலும் அவர் தனது சொந்த வீட்டைக் கூட விற்று இந்த மிகப் பெரிய உதவிகளைச் செய்திருக்கின்றார். பணம் இருப்பவர்களிடத்தில் மனம் இருக்காது, மனம் இருப்பவர்களிடத்தில் பணம் இருக்காது என்று சொல்வார்கள். ஆனால், விமல் ஜெயரட்ணத்திடம் அவை இரண்டும் நிறைந்திருக்கின்றது. அவரது தியாகத்தைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளே போதாது.

தனது உரையில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்ட மருத்துவக் கலாநிதி விமல் ஜெயரட்ணம், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் யேசுதானந்தனால்தான் தான் இங்கே இவ்வளவு விடயங்களையும் செய்ததாகக் கூறினார். அது முற்றிலும் உண்மை. முன்னாள் அதிபர் யேசுதானந்தன் மிகச் சிறப்பான தலைமைத்துவத்தை இந்தப் பாடசாலைக்கு வழங்கியிருந்தார். அவர் அன்று “இந்த மேலதிக வேலைகள் எனக்கேன்?“ என்று எண்ணியிருந்தால், இந்தப் பெரிய திட்டங்கள் பாடசாலைக்குக் கிடைத்திருக்காது. அதனால்தான், எல்லாமே “தலைமைத்துவத்தில்” தான் தங்கியிருக்கின்றது என நான் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றேன்.

எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தினால் வீணான பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடுமோ என்ற எண்ணம் அதிகாரிகளிடத்தில் அதிகரித்து வருகின்றமையால், மக்கள் அடைய வேண்டிய பல நன்மைகள் அவர்களைச் சென்றடைவதில்லை -என்றார். (அ)

## தமிழக மீனவர்...

நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளை, இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை எட்ட இராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் முதற்கட்ட கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த விஜயத்தின்போது, தமிழக முதலமைச்சர் விஜய் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரைப்படங்களில் நீதிக்காகப் போராடிய அதே நேர்மையை முதலமைச்சர் விஜய், அரசியலிலும் வெளிப்படுத்துவார் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், பரஸ்பர புரிந்துணர்வின் மூலம் இரு நாட்டு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும், கடல் வளங்களும் பாதுகாக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

## நான் தடுத்து...

தெரிவித்துள்ளார்.

தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு மீண்டும் செல்ல விரும்பவில்லை என்றும், அவ்விடம் ஒரு "நரகம்" போன்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

சுரேஷ் சாலேயின் மனைவியான மனோரி சலேயின் கோரிக்கைக்கு இணங்க, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சுரேஷ் சாலேயை சந்திப்பதற்கு அவரது சட்டத்தரணிக்கு முதன்முறையாக நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

அதன்போது, இந்த விடயத்தை தெரிவித்த சுரேஷ் சாலே, கொழும்பு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் கடமை தவறியமைக்காக அந்த நபர் முன்னரே குற்றவாளியாகக் காணப்பட்டு, அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடர பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது மற்றும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை குறித்தும் சட்டத்தரணியால் சுரேஷ் சாலேயிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கைதிகளுக்கு முன்னிலையில் நடத்தப்பட்ட நிர்வாண சோதனை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்தும் இதன்போது விளக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறும் சட்டத்தரணி அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம், சட்டத்தரணியுடனான இந்த சந்திப்பின் போது சுரேஷ் சாலே தனது தற்போதைய நிலைமை குறித்து மேலும் பல கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு மீண்டும் செல்ல விரும்பவில்லை என்றும், அவ்விடம் ஒரு “நரகம்” போன்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரசியல் பின்னணி கொண்ட ஒருவரால் அவ்விடம் நிர்வகிக்கப்படுவது குறித்து அவர் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

மேலும், கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் தன்னை தொழில் முறைத் தன்மையுடன் கவனித்துக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள அவர், தனது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு மரணம் சம்பவித்தாலும் கூட, மீண்டும் தடுப்புக் காவலுக்குச் செல்வதை விட மருத்துவமனையிலேயே தங்கியிருக்க விரும்புவதாகவும் தனது சட்டத்தரணியிடம் வலியுறுத்திக் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# வடக்கு ரயில் சேவைகளில் மேலதிக சிக்கல் நிலைமை!

### ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கவலை!

கொழும்பு, ஜூன். 19

தலைமன்னார் ரயில் பாதையின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளபோதிலும், என்ஜின் பற்றாக்குறை காரணமாக அந்தப் பாதையிலான ரயில் சேவைகள் இன்னும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இப்பாதையில் தினசரி 4 ரயில் சேவைகள் இயக்கப்பட்ட போதிலும், தற்போது ஒரு ரயிலும் இயக்கப்படுவதில்லை. அங்கிருந்த என்ஜின்கள் வேறு பாதைகளுக்கு மாற்றப்பட்டதால், வடக்கிற்கான ரயில் சேவைகளில் மேலதிக சிக்கல்கள் தோன்றியுள்ளன என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்னர் நாளொன்றுக்கு 420 இற்கும் அதிகமாகக் காணப்பட்ட ரயில் பயணங்களின் எண்ணிக்கை, தற்போது 200 இற்கும் குறைவான மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கசுன் சாமர ஜயசேகர ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்-

கொரோனாவுக்கு முன் பயணிகள் போக்குவரத்து, கலப்பு சேவைகள், எரிபொருள் மற்றும் சரக்கு போக்குவரத்து உட்பட நாளொன்றுக்கு 420க்கும் அதிகமான ரயில் சேவைகள் இயக்கப்பட்டன.

கொரோனாவுக்கு பின் இந்த எண்ணிக்கை ஆரம்பத்தில் 350 ஆகக் குறைந்து, பின்னர் 250 ஆகக் சரிவடைந்தது.

தற்போது நாளொன்றுக்கு 200 இற்கும் குறைவான ரயில் சேவைகளே இயக்கப்படுகின்றன.

இவ்வாறு இயக்கப்படும் ஒரு சில ரயில்களும் முறையான கால அட்டவணையைப் பின்பற்றுவதில்லை. ரயில்கள் ரத்து செய்யப்படுவது நாளாந்த நிகழ்வாக மாறியுள்ளது. கடந்த திங்கட்கிழமை மாத்திரம் இரண்டு ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அண்மைய பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து ரயில் என்ஜின்களை முறையாக நவீனமயப்படுத்தத் தவறியதே இந்த வீழ்ச்சிக்குக் காரணம்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியில் பொதுப் போக்குவரத்து பலப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், ஆனால் ரயில் துறைக்கு உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

கடந்த 2022 ஆம் ஆண்டு கடுகமுவ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு சேதங்கள் ரயில் பொறியியலாளர்களின் விரைவான நடவடிக்கையால் சில நாள்களிலேயே சரி செய்யப்பட்டன.

இருப்பினும், அண்மையில் பஹல கடுகண்ணாவை மற்றும் பலன ஆகிய பகுதிகளுக்கு இடையே ஏற்பட்ட மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பாதையைச் சீரமைக்க, 6 மாதங்கள் கடந்தும் அதிகாரிகள் இன்னும் திட்டமிடல் மட்டத்திலேயே இருக்கிறார்கள்.

குறைந்த எண்ணிக்கையிலான ரயில்களை இயக்குவதன் மூலம் செலவுகளைக் குறைத்து, நிதிச் செயலாற்றுகையை மேம்படுத்தலாம் என்ற விசித்திரமான எண்ணம் சில அதிகாரிகளிடம் காணப்படுகிறது.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வசதிகள் இருந்தும், அதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காக ரயில் திணைக்களமும் அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும்-என குறிப்பிட்டுள்ளார்.

(அ)

## நன்னீர் ஐஸ் உற்பத்தி மையம் இரணைப்பாலையில் திறப்பு!

### ஜப்பான் அரசு நிதியுதவி



முல்லைத்தீவு, ஜூன். 19

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் இரணைப்பாலை கிராமிய கடற்றொழில் அமைப்பிற்காக நிறுவப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட நன்னீர் ஐஸ் உற்பத்தி நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக மீனவர் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள், உள்ளூராட்சி பிரதிநிதிகள், கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பெருமளவிலான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஐஸ் உற்பத்தி நிலையம் மூலம் மீனவர்கள் தங்களது மீன்பிடி உற்பத்திகளை தரமான முறையில் பாதுகாத்து சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளும் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## வாகனத்தில் பெண்ணின் சடலம் மீட்பு; நுவரெலியா பொலிஸ் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன். 19

கண்டி, தெல்தெனிய மருத்துவமனைக்கு அருகில் வாகனம் ஒன்றில் இருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த பெண் அதற்கு முந்தைய நாள் (ஜூன் 16ஆம் திகதி) நுவரெலியாவில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் தனது காதலனுடன் தங்கியிருந்ததாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

வெலிகம பகுதியைச் சேர்ந்த, அம்பாறை மருத்துவமனையில் பிசியோதெரபிஸ்டாக பணிபுரிந்து வந்த பி.ஆர். ஷியாமா தர்ஷனி (வயது-33) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கன்னொருவ பகுதியைச் சேர்ந்த தனது காதலனுடன் கடந்த 2026 ஜூன் 3ஆம் திகதி முதல் நுவரெலியாவில் உள்ள தனியார் சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்ததாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறை அடுத்து அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும், அதன் பின்னர் அவரது சடலம் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டு தெல்தெனிய மருத்துவமனைக்கு அருகில் கைவிடப்பட்டிருக்கலாம் என்றும் விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

பாதுகாப்பு கமெரா காட்சிகளின்படி, அந்தப் பெண்ணின் முகம் மூடப்பட்ட நிலையில் அவரது காதலனால் ஹோட்டலில் இருந்து வெளியே தூக்கிச் செல்லப்படுவதைக் காட்டுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விசாரணையில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், நுவரெலியா பொலிஸார் தெல்தெனிய பொலிஸாருடன் இணைந்து மேலதிக தகவல்களைப் பெற்று, கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார். (அ)

## எல் நினோவால் இலங்கைக்கு பாரியளவில் பாதிப்பு இல்லை!

### விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர்

கொழும்பு, ஜூன். 19

எதிர்பார்க்கப்படும் எல் நினோ காலநிலை மாற்றங்களினால் இலங்கைக்குப் பாரியளவில் பாதிப்புகள் ஏற்படமாட்டாது என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி என். ஏ. ஆர். டி. விக்ரமரச்சி தெரிவித்துள்ளார்.

பேராதனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பசுபிக் சமுத்திரம் உட்பட உலகின் பல பகுதிகளில் நிலவும் அதிக உஷ்ணம் காரணமாக கடல் நீர் வெப்பமடைவதையே "எல் நினோ" காலநிலை மாற்றம் எனக் குறிப்பிடுகின்றனர். இதனால் கடுமையான வறட்சி ஏற்பட்டு விவசாயத்துறை பாதிக்கப்படலாம் என்றும், மழைவீழ்ச்சி குறைந்து, வெப்பநிலை அதிகரிக்கும் என்றும், நெல் உள்ளிட்ட விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடையும் என்றும் சில எதிர்வுகூறல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இலங்கையின் புவியியல் அமைவிடம் மற்றும் எமக்குக் கிடைக்கின்ற பருவமழைப் பொழிவு ஆகியவற்றின் காரணமாக, இந்த எல் நினோ தாக்கத்தினால் நாடு கடுமையான பாதிப்புகளை எதிர்கொள்ளாது என்றே நாங்கள் கருதுகின்றோம். தற்போதைய நிலையை விட சற்று அதிகமான வெப்பநிலையும், ஓரளவுக்குக் கூடுதல் மழைவீழ்ச்சியும் ஏற்படலாமே தவிர, அச்சுறுத்தலான சூழல் உருவாகாது.

இருந்த போதிலும், இதனை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பல விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, குறைந்த நீர் விநியோகத்தைக் கொண்டு, வறட்சிக்குத் தாக்குப் பிடித்து வளரக்கூடிய உணவுப் பயிர்களை நாம் அடையாளம் கண்டு பயிரிட வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தமட்டில், குறைந்த காலத்தில் அறுவடை செய்யக்கூடிய, உலர் வலயத்திற்குப் பொருத்தமான நெல் ரகங்களைத் தெரிவு செய்து பயிரிடுவதன் மூலம் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

அத்துடன், நாட்டுக்குள் பயிரிடக்கூடிய குரக்கன், பயறு, சோளம் போன்ற உப உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும் இப்பிரச்னைகளுக்கு ஓரளவுக்குத் தீர்வை எட்ட முடியும் - என்றார்.

(அ)

## வருண ஜயசுந்தர மனு; விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஜூன். 19

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவை தற்போதைய நிலையில் கைது செய்வதற்கு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து, அவர் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணைகளை நிறைவு செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தொடர்பில், தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி வருண ஜயசுந்தரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சஷி மகேந்திரன் மற்றும் அதித்திய பட்டபெந்திகே ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கு முன்னர் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, மனுதாரரான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரை இடமாற்றம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அது குறித்த சமர்ப்பிப்புகளை நீதிமன்றத்தில் முன்வைத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், மனுதாரரின் இடமாற்றம் தொடர்பான உரிய பரிந்துரைகளை பொலிஸ்மா அதிபர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரிவித்தார்.

அதற்கமைய, தற்போதைய கட்டத்தில் மனுதாரரைக் கைது செய்வதற்கு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்துக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் குழாம், மனு மீதான மேலதிக விசாரணைகளை இத்துடன் நிறுத்துவதாக அறிவித்தது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org